# ஒல்லாந்தர் ஆட்சியின் இறுதிக் காலம்

44




கி.பி. 1726-ம் ஆண்டு யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெய்த பெருமழையினாலும், அடித்த புயற்காற்றினாலும், மிகப் பெரிய சேதம் ஏற்பட்டது. ஏராளமான கட்டடங்கள் இடிந்துபோயின. ஒல்லாந்தர்களால் வெட்டப்பட்ட குளங்களும், ஏரிகளும் உடைப்பெடுத்தும், தூர்ந்தும் போய்விட்டன. வேளாண்மை நிலங்கள் மண்மூடிப் போய்விட்டன. நாட்டில் பெரும் பஞ்சமும் நோயும் உருவாகியது.

> **கி.பி. 1784 அளவில் ஐரோப்பாவில் ஏற்பட்ட ஆதிக்கப் போட்டிகளில் ஏற்கெனவே கடற்பலத்தை வைத்திருந்த ஸ்பானியர்களும், போர்த்துக்கேயர்களும் பலமிழந்துபோக ஆங்கிலேயர்களும், பிரெஞ்சுக்காரர்களும் கடலாதிக்க பலம் மிக்கவர்களாக உருவெடுத்தார்கள்.**

இதனால் அரசாங்கத்துக்கு வந்துசேர வேண்டிய வரிப்பணம் வந்து சேரவில்லை. இடிந்துபோன கட்டடங்களைத் திருத்துவதற்கும், தூர்ந்துபோன குளங்களையும், ஏரிகளையும் தூர் எடுத்துப் புனரமைப்பதற்கும் மேலதிகச் செலவுகள் செய்யவேண்டியிருந்தது. இந்த நிலைமை கி.பி. 1733 வரை தொடர்ந்தது. வியாபார நலனை மட்டுமே குறியாகக் கொண்டிருந்த ஒல்லாந்தருக்கு இது விரும்பத்தகாத விடயமாக இருந்தது.

கி.பி.1736-ல் கொழும்புத் தேசாதிபதியாக இருந்த ஜோன் மக்காறோ (Jan Maccara) மாதகலில் வசித்த மயில்வாகனப் புலவரிடம் யாழ்ப்பாணக் குடாநாட்டின் வரலாற்றை எழுதுமாறு கோரிக்கை விடுத்தான். அவன் ஏற்கெனவே யாழ்ப்பாணக் கம்மாந்தராக இருந்தபடியால் அந்த வரலாற்றை எழுதி வெளியிட வேண்டும் எனும் விருப்பம் அவனுக்கு இருந்தது.

அவ்வாறே வரலாற்றில் முதற்தடவையாக யாழ்ப்பாணத்தவர் ஒருவர் கி.பி.1753-ல் குடாநாட்டுக்கான மத போதகராக நியமிக்கப்பட்டார். இவர் யாழ்ப்பாண செமினெறியில் மதக்கல்வி கற்று பின்னர் கொழும்பு சென்று வேற்று மொழிக் கல்வியில் தேர்ச்சியடைந்ததும், ஒல்லாந்து நாட்டுக்கு அழைக்கப்பட்டு பிலிப் து மெல்லோ (Phillip de Melho) என்ற பெயரில் குரு நிலைப் பட்டங்கட்டப்பட்டார். இவர் தமிழ் போர்த்துக்கேயம், ஒல்லாந்து, கிறீக், லத்தீன் எபிரேயு என்னும் 6 மொழிகளில் வல்லவராய் இருந்தார் எனச் சொல்லப்படுகிறது. தமிழ், ஒல்லாந்து (டச்) போர்த்துக்கேய மொழிகளில் இவர் மதப் பிரச்சாரம் செய்யும் திறமையுள்ளவராய் இருந்ததாகத் தெரிய வருகிறது. கி.பி. 1775-ல் யாழ்ப்பாணத்திற்குப் போயிருந்த ஒல்லாந்து தேசாதிபதி, ஒல்லாந்து மொழியான டச் மொழியில் இவர் ஆற்றிய மதப் பிரசங்கத்தைப் பற்றிப் புகழ்ந்து எழுதியுள்ளார்.

ஒல்லாந்தர் காலத்தில் மானிப்பாய் அச்சகத்தில் அச்சிடப்பட்ட சூடாமணி நிகண்டுடன் சேர்க்கப்பட்டிருக்கும் 20 உவமானப் பாட்டுக்கள் இவர் பாடியவையேயாகும். கிரேக்க மொழியிலிருந்து இவர் தமிழில் மொழிபெயர்த்த 'புதிய ஏற்பாடு' 1749-ம் ஆண்டு ஒல்லாந்தருடைய அச்சகத்தில் பதிக்கப்பட்டது. 1790-ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 10-ம் திகதி இவர் காலமானதாக ஒல்லாந்தர்களது குறிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.


போர்த்துக்கேயர் காலத்தைப் போலவே ஒல்லாந்தர் காலத்திலும், தமிழ் கற்பிப்பதற்கும், தமிழ் மொழியை விருத்தி செய்வதற்கும் வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. ஆனாலும், ஆங்காங்கே சில தமிழ்ப் புலவர்களும், பண்டிதர்களும் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வந்தனர்.

சுன்னாகம் வரதபண்டிதர், மாதகல் மயில்வாகனப் புலவர், சிற்றம்பலப் புலவர், தெல்லிப்பளை அருளப்ப நாவலர், வட்டுக்கோட்டை கணபதி ஐயர், அச்சுவேலி நமசிவாயப் புலவர் மன்னார் கவுரியேல் பச்சேக்கு, வண்ணார்பண்ணை கூழங்கைத் தம்பிரான், இருபாலை சேனாதிராய முதலியார், இணுவில் கதிர்காமசேகர சின்னத்தம்பிப் புலவர், சண்டிலிப்பாய் வில்வராய சின்னத்தம்பிப் புலவர் ஆகியோர் ஒல்லாந்தர் காலத்தில் தமிழ் வளர்த்த புலவர்கள், பண்டிதர்களில் குறிப்பிடத் தக்கவர்களாவார்.

பிற்காலத்தில் தமிழரசர் காலத்தையும், போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தையும், போலவே ஒல்லாந்தர் ஆட்சியின் தொடக்க காலத்தில் குடாநாட்டின் சாதி அமைப்பில் குறைந்தவர்களுக்கு கல்வி உரிமை மறுக்கப்பட்டிருந்தது. ஆயினும் பிற்காலத்தில் குறைந்த சாதியிலும், மேல் தட்டிலுள்ள சில சாதியினருக்கும், அவர்கள் தங்களது மதத்தில் சேரும் பட்சத்தில் விசேட சலுகைகள் வழங்கப்பட்டன.

அதாவது, சில குறிப்பிட்ட வகை அரச ஊழியங்களிலும் இராணுவத்தில் படை வீரர்களாகவும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அவர்களின் பிள்ளைகளும் மதக் கல்வி கற்கவும் அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வாறு, அரச சேவகம், அரச நிறுவனக் கல்வி ஆகியவற்றால் காலாகாலமாக யாழ்ப்பாண சமூக அமைப்பில் நிலவிய சாதியமுறை பெரும் நெருக்குதலுக்குள்ளாகியது. ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்துக்கு முன்பு, சாதி குறைந்தவர்கள் எந்த வகையான ஆடைகளை அணிய வேண்டும், தலைமயிரை நீளமாக வளர்த்திருக்க வேண்டும், காதுகளில் சாதிக் குறியைக் காட்டும் அணிகலன்களை அணிந்திருக்க வேண்டும் என்ற கட்டுப்பாடுகள் இருந்தது. ஆனால் அரச சேவகத்திற்கும், மதப் பள்ளிக்கூடத்திற்கும் அவர்கள் போக ஆரம்பித்ததும், இந்தக் கட்டுப்பாடுகள் தகர ஆரம்பித்தன. இதனால் யாழ்ப்பாணத்து மேல் சாதியினர் ஒல்லாந்து தேசாதிபதிக்கு இவ்வாறு அவர்கள் நடக்க அனுமதிக்க வேண்டாம் என்று மனு ஒன்று தாக்கல் செய்ததாக ஒல்லாந்தர் ஆட்சியின் இறுதிக் காலக் குறிப்புக்களில் இருந்து அறிய முடிகிறது.



ஒல்லாந்தர் கால யாழ்ப்பாணம்; கடல்வழித் தோற்றம்

கி.பி. 1784 அளவில் ஐரோப்பாவில் ஏற்பட்ட ஆதிக்கப் போட்டிகளில் ஏற்கெனவே கடற்பலத்தை வைத்திருந்த ஸ்பானியர்களும், போர்த்துக்கேயர்களும் பலமிழந்துபோக ஆங்கிலேயர்களும், பிரெஞ்சுக்காரர்களும் கடலாதிக்க பலம் மிக்கவர்களாக உருவெடுத்தார்கள்.

ஒல்லாந்தருக்கும், யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஏற்பட்ட பெரும் பஞ்சத்தாலும், அவர்களுக்குப் பெரும் வருமானத்தைத் தந்த யானை வியாபாரம் இந்தியாவில் ஏற்பட்ட உள்நாட்டுக் குழப்பங்களால் நசிந்து விட்டதாலும் அவர்களது காலனியப் பிடி கொஞ்சம் கொஞ்சமாகத் தளர ஆரம்பித்தது.

அவர்களுடைய வருமானங்கள் குறைந்துபோய் செலவினங்கள் அதிகரித்ததால் அதிக நிலப்பரப்பை தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பது முடியாத காரியமாக இருந்தது. ஒல்லாந்தருடைய 1 இறைசால் 60 துட்டு அல்லது 12 பணம் கொண்டது. 1 துட்டு 2 காசும், 1 காசு 5 சின்னமும் கொண்டதாக இருந்தது. பிற்காலத்தில் 1 இறைசால் 48 துட்டாகக் குறைந்துவிட்டது. கி.பி. 1785-ல் வெள்ளி செப்பு நாணயங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டதால் தாள் காசு முதன் முதலாக அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெள்ளி, செப்பு நாணயங்களை உருவாக்குவதிலும் பார்க்க தாள் காசை அச்சிட்டு வெளியிடுவது மலிவாக இருந்தது.

**- நக்கீரன்**